**செய்தி வெளியிட்டு எண்:–215** **நாள் : 02.11.2023**

## செய்தி வெளியீடு

குடும்ப வன்முறையிலிருந்து பெண்களைப் பாதுகாக்கும் சட்டம் 2005–ன் கீழ் பாதுகாப்பு அலுவலர்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய இளநிலை உதவியாளர் / தட்டச்சர்(Junior cum Typist)பதவிக்கு தொகுப்பூதியத்தில் மாத சம்பளம் ரூ.12000/–(ரூபாய் பனிரெண்டாயிரம் மட்டும்) என்ற ஊதியம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

தற்போது சென்னை மாவட்டத்தில் 2 காலிபணியிடங்கள் நிரப்பப்பட உள்ள நிலையில் பத்தாம்வகுப்பு தேர்ச்சிபெற்றவராகவும், தட்டச்சில் தமிழ் மற்றும் ஆங்கிலம் தேர்ச்சி பெற்றவராகவும், கணினி பயன்பாட்டை அறிந்தவராகவும் உள்ள மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் (MBC/DC) சார்ந்த 32 வயதுக்குட்பட்டவராகவும், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்த நபர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

அனைத்து சான்றிதழ்களுடன் கீழ்கண்ட அலுவலகத்தை அணுகி, 10.11.2023 பிற்பகல் அலுவலக நேரத்திற்கு முன்பு விண்ணப்பிக்குமாறு சென்னை மாவட்ட ஆட்சியர் திருமதி. ரஷ்மி சித்தார்த் ஜகடே, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்

மாவட்டசமூகநலஅலுவலகம், சென்னை
மாவட்டஆட்சியர்அலுவலகம் 8–வதுதளம்,
சிங்காரவேலன்மாளிகை, இராஜாஜிசாலை,
சென்னை – 01.

**செய்தி வெளியீடு:–**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்,**
**சென்னை மாவட்டம்.**